பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 29 சனிக்கிழமை 13.07.2024 கதிர் 248

# ஜனாதிபதித் தேர்தலை தடுக்க மற்றுமொரு வழக்கு தாக்கல்

ஜனாதிபதித் தேர்தலை தடுத்து நிறுத்துமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மற்றொருவழக்குத் தர்கல் செய்யப்பட்டுள்ளது. அரசமைப்பின் 19ஆவது திருத்தம் உரிய வகையில் நிறைவேற்றப்படாததால் அதனை பொதுமக்கள் கருத்து கணிப்புக்குட்படுத்தி நிறைவேற்றும்வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசியலமைப்பிற்கு முரணானதுஎனதீர்ப்புவழங்குமாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அருண லக்சிறி உனவட்டுனஇந்தமனுவைதாக்கல் செய்துள்ளார்.

மனுவின் பிரதிவாதிகளாக தேர்தல்கள்ஆணைக்குழுமற்றும்அதன் உறுப்பினர்கள், நாடாளுமன்ற செயலாளர்நாயகம்,சட்டமாஅதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

19 ஆவது திருத்தத்தின் ஊடாக அரசமைப்பின் 70 ஆவது சரத்து திருத்தப்பட்டு தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்றத்தை ஒரு ☞2

## இது ரகசியம் அல்ல!

இல்லாத கூட்டமைப்புக்கு செல்வம் அடைக்கலநாதனை தலைவராக்குவதே தனது விருப்பம் என்றுபுளொட்தலைவர்சித்தார்த்தன் தெரிவித்திருக்கிறார். கூட்டமைப்பின் தலைவராக 25 வருடங்களாக சம்பந்தர் அண்ணன் இருந்த காரணத்தால் கூட்டமைப்பில் உள்ள மற்றைய கட்சிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்றுவேறு நியாயம் கூறியிருக்கிறார் சித்தர்.

அவரது புளொட் சார்பில் உருவாக்கப்பட்டஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணி என்கிற சின்ன டிரிஎன்ஏ என்கிற கட்சிதான் இன்று ரெலோ, ஈபிஆர்எல்எவ், புளொட், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றின் கூட்டாக இயங்குகின்றது. இதுதான் ரிஎன்ஏ அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றெல்லாம் பறைசாற்றி வந்ததார்கள். அதில் தீவிரமாக இருந்தவர் சித்தார்த்தன்தான்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை மக்கள் மத்தியில் தமிழ்த் ☞2

## உரிய நேரத்தில் தேர்தல் அவசியம்

### ஆணைக்குழுவிடம் எதிர்க் கட்சிகள் வலியுறுத்து

அரசமைப்பு சதிகளின் ஊடாக ஜனாதிபதித்தேர்தலுக்குஏற்படுத்தப்படும் அழுத்தங்களை தடுக்குமாறு கோரியும் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரஞ்சித் மத்தும பண்டார, ரவூப் ஹக்கீம், உதயகம்மன்பில, அத்துரலிய ரத்தன தேரர் உள்ளிட்ட 30 பேரின் கையொப்பங்களுடன் இந்தக் கடிதம் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக தோல்வியடையக்கூடும் என்ற அச்சத்திலுள்ள அளும் தரப்பு 2024 நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை பல்வேறு உத்திகளை கொண்டு ஒத்திவைக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சுமத்தியுள்ளன.

அரசமைப்பில் ஜனாதிபதியின் பதவிக்காலம்05ஆண்டுகள்என ☞2

## தேர்தலை நடத்துவதில் எந்த தடங்கலுமில்லை

### ஆணைக்குழு தலைவர் தகவல்

ஜனாதிபதிதேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்ஆணைக்குழு சட்டரீதியான அல்லது நிதி ரீதியான தடங்கல்களை எதிர்கொள்ளவில்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் ஆர்எம் ஏஎல் ரத்நாயக்க தெரிவித்தார்.

சட்டரீதியானமற்றும் நிதி ரீதியான தடைகள் காணப்படுகின்றமையினால் ஜனாதிபதி தேர்தலை தேர்தல் ஆணைக்குழுவினால் நடத்த முடியுமா என்று பலதரப்பினர் கேள்வி எழுப்பியுள்ள நிலையிலேயே தேர்தல்கள் ஆணையாளர் இதனைத் ☞2

## இனவாத முறையில் கட்சிகள் அமைப்பதை தடைசெய்யுங்கள்

### நீதி அமைச்சர் நாடாளுமன்றில் வலியுறுத்து

ஜனநாயகம்தலைதூக்க வேண்டுமானால் இனவாத முறையில் கட்சி அமைப்பதைத் தடை செய்ய வேண்டும். அதற்குத்தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

மதத்தீவிரவாதத்தினை தடுப்பதன் அவசியம் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷா விதானகே கொண்டுவந்த தனிநபர் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் நேற்றுஉரையாற்றிய அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

அடிப்படைவாதம் எந்த வகையில்தலைதூக்கினாலும் அதனைத் தடுப்பது நாடாளுமன்றத்தின்கடமை.ஈஸ்டர் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் ஐ,எஸ். தொடர்பில் நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்த விடயங்கள் தொடர்பாக அன்று இருந்த ஆளும் தரப்பு நடவடிக்கை எடுத்திருந்தால்இந்ததாக்குதல் இடம்பெற்றிருக்காது.

இனவாதம், ☞2

## 19 கல்வியியல் கல்லூரிகளுமே பல்கலைக்கழகங்களாக்கப்படும்

### ஆண்டுக்கு 7,500 பட்டதாரி ஆசிரியர்கள் உருவாக்கப்படுவர் என்கிறார் கல்வி அமைச்சர்

இலங்கையில் உள்ள 19 கல்வியியல் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களாக்கி அவற்றில் இருந்து 4 வருடங்களில் பட்டதாரிகளைஉருவாக்கத்திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் ஆண்டுக்கு 7500 பட்டதாரி ஆசிரியர்கள் உருவாக்கப்படுவார்கள் என்றுகல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த் குமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் ☞8

## தனியார் தொலைக்காட்சி மீது கல்வி அமைச்சர் சுசில் புகார்

### நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழுவுக்கு அழைக்க வலியுறுத்து

தனியார் தொலைக் காட்சி ஒன்றில் தான் நாடாளுமன்றத்தில்தெரிவிக்காத விடயங்களைக் குறிப்பிட்டு செய்தி வெளியிட்டதன் மூலம் தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. எனவே இந்த ஊடகத்தை சிறப்புரிமைக் குழு முன்பாக அழையுங்கள் என்றுசபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது ☞8

### யாழ். மாவட்டத்தில் உள்ள

## அரச ஆளணிப் பற்றாக்குறையை உடன் நிவர்த்தி செய்து தாருங்கள்

### பிரதமரிடம் வடக்கு ஆளுநர் கோரிக்கை





யாழ் மாவட்டத்தில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தித்து தருமாறு நேற்று யாழ்ப்பாணம் வந்த பிரதமரிடம், ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

யாழ். மாவட்டவிசேட ஒருங்கிணைப்புக் ☞8

## படையினருக்கு நிபந்தனையின்றி காணி உறுதிகளை வழங்க திட்டம்

### 4 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுமாம்

நாட்டின் இறைமையைப் பாதுகாக்க உயிர்த் தியாகம் செய்த, போரில் கடமையாற்றிய முப்படையினர், இலங்கைப் பொலிஸ் மற்றும்சிவில்பாதுகாப்புப் படையில் ஊனமுற்ற வீரர்களுக்கும், உயிர்த் தியாகம்செய்தவர்களின் குடும்பத்தாருக்கும்வசிப்பதற்காகவழங்கப்பட்டுள்ள அரச காணிகளை நிபந்தனையின்றியும் கட்டணங்கள் ☞8

## வலுவான பொருளாதாரத்திற்கான அடித்தளத்தை இட்டுள்ளார்களாம்

ஏற்றுமதி பொருளாதாரம்,உற்பத்தி,சுற்றுலா, தொழில்நுட்பத் துறை, நவீன விவசாய முறை ஆகியவற்றின் ஊடாக நாட்டுக்குள் வலுவான பொருளாதாரத்தைக் கட்டமைக்க முடியும் என்றும், அதற்கு அவசியமான அடித்தளத்தை ஆளும் தரப்பு இட்டுள்ளதெனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதி வலயமான, 1000 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பிங்கிரிய ஏற்றுமதி வலயத்தின் இரண்டாம், மூன்றாம் கட்ட அபிவிருத்தி பணிகளை ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தேசியக் கூட்டமைப்பாகக் காட்டி மாயையை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு அந்தக் கூட்டணிக்குள்ளேயே முதலில் முட்டுக்கட்டை போட்டவர் சுரேஸ் பிரேமச்சந்திரன். கூட்டமைப்பு கூட்டமைப்பு என்று கூறிவிட்டு தேர்தல்நேரத்தில்ஜனநாயகதமிழ்த் தேசியக் கூட்டணி என்று போய் மக்கள் முன் நின்றால் அதனால் குழப்பம்தான் ஏற்படும் எனத் தெரிவித்த சுரேஸ், தொடக்கத்தில் இருந்தே தமது கூட்டு ஜனநாயகக் கூட்டணிதான் என்று கூறிவந்தார். ஆனால் சுரேஸ் விளக்கம் இன்றி அப்படிக் கூறிவருகின்றார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இப்போது ஜனநாயகக் கூட்டணிதான். அதனால்அதைகூட்டமைப்புஎன்று கூறுவதுதான் பெருத்தம் என்று பல தடவைகள் வெளிப்படையாகவே பலரிடம் விளக்கம் கொடுத்தவர் சித்தர்.

இப்போது, நாடாளுமன்ற உறுப்பினர் பதவி என்று வந்ததும் ஜனநாயகக்கூட்டணியைத்தூக்கிக் கடாசிவிட்டுஇல்லாதகூட்டமைப்பைத் தூக்கிப் பிடிக்கப் பார்க்கிறார். நேற்று செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததைப் பாருங்கள்,

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக செல்வம் அடைக்கலநாதன்தான் இருக்க வேண்டும் என்றுதான் நாம் விரும்புகின்றோம்.

ஆரம்பத்திலிருந்தே தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள்சிலரும்இதற்கு ஆதரவாக இருந்தாலும் இன்று அவர்களுடைய கட்சிக்குள் ஏதோ பிரச்சினை உருவாகியிருக்கின்றது போல் தெரிகின்றது. அவர்கள் அதைத் தீர்த்துக்கொண்டு சரியான முடிவொன்றுக்கு வருவார்கள் என்று நம்புகின்றோம்.

ஏறக்குறைய23வருடங்களாகத் தமிழ் அரசுக் கட்சியின் சம்பந்தன் அண்ணரே கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக இருந்திருக்கின்றார். ஆகவே, அந்த நாடாளுமன்றக் குழுத் தலைவராக மற்றக் கட்சிகளில் ஒருவருக்குக் கொடுப்பதுதான் முறை என்று நினைக்கின்றோம். இதனடிப்படையில் அவர்கள் அதைச் செய்வார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

கூட்டமைப்பில் தற்போதுள்ள மூன்றுகட்சிகளில்இரண்டுகட்சிகள் செல்வம் அடைக்கலநாதன்தான் நாடாளுமன்றக்குழுத்தலைவராகத் தெரிவுசெய்யப்பட வேண்டும் எனச் சொல்லியுள்ளன. எனினும், அந்த நிலைப்பாட்டுக்கு மாறாக தமிழ் அரசுக் கட்சி இருக்கின்றது.

தமிழ் அரசுக் கட்சியில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். எங்களில் 4 பேர் (ரெலோ, புளொட்) இருக்கின்றோம். அந்த 6 பேரில் ஒருவர், இருவர் என எங்களுடைய நிலைப்பாட்டுக்குச் இணங்கிச் சம்மதித்தாலும், தமது கட்சியின்தீர்மானத்தைஎதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அடுத்தகூட்டத்தில்என்னநடக்கின்றது எனப் பார்ப்போம் - என்றார்.

அதாவது அவரது கருத்துப்படி இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இருக்கிறது. அதில் தமிழ் அரசுக் கட்சி, புளொட், ரெலோ ஆகியன இருக்கின்றன. மற்றொரு பக்கத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் இருக்கின்றன. அதிலும் புளொட், ரெலோ எல்லாம் இருக்கின்றன என்கிறார்.

விட்டால்கவுண்டமணி-செந்தில் வாழைப்பழநகைச்சுவைபோன்று ''அதாண்ணே இது'' என்றும் கதைவிடுவார் போலுள்ளது. மக்களே எதற்கும் காதை நன்றாகத் தீட்டிக்கொண்டு இவர்கள் சொல்வதைக் கேளுங்கள்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடத்தின் பின்னர் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி இழந்துள்ளதாகமனுதாரர்மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

19ஆவது திருத்தம் பொதுமக்கள் கருத்து கணிப்புக்கு உட்படுத்தப்படட்டிருக்கவேண்டும் என உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் தீர்ப்பு வழங்கிய போதிலும் இதுவரைமக்கள்கருத்துக்கணிப்பின் மூலம்அதுஅங்கீகரிக்கப்படவில்லை என மனுதாரர் மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு உட்பட்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுதயாராகிவருவதுடன் 19 ஆவது திருத்தத்தை மக்கள் கருத்துக்கணிப்பின் மூலம் நிறைவேற்றாமல் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது சட்டத்திற்கு முரணான செயலாகும் எனவும் மனுதாரர் அந்த மனுவில் வலியுறுத்தியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு, நாட்டின் அரசமைப்பை மீறி 19ஆவது அரசமைப்புத்திருத்தத்தை மக்கள் கருத்துக்கணிப்பின் மூலம் அங்கீகரிக்காமல் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாகக் கருதி ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதன் ஊடாக பொதுமக்களின் அடிப்படை உரிமைகள்மீறப்படுவதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 19 ஆவது அரமைப்புத்திருத்தத்தை மக்கள் கருத்துக்கணிப்புக்கு உட்படுத்தும்படி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு உத்தரவிடுமாறும் மனுதாரர் தமது மனுவினூடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின்பதவிக்காலத்தை வரையறை செய்யும்படி கேட்டுத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம்தள்ளுபடிசெய்தநிலையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 ஆண்டுகள் மட்டுமேதான் என்று உயர்நீதிமன்றம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

## தேர்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

தேவையான நிதி எங்களிடம் உள்ளது. மேலும்தேர்தல்தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எங்களிற்குசட்டபூர்வமான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேர்தலைசுமூகமாகநடத்துவது குறித்து சட்ட அமுலாக்கல் தரப்பின் அதிகாரிகள் மற்றும் தொடர்புபட்ட ஏனைய தரப்புடன் நாங்கள் கலந்துரையாடியுள்ளோம்.

ஜூலை 17 நிதியமைச்சின் அதிகாரிகளை சந்திக்கவுள்ளோம். ஜூலை 14ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதி தேர்தல் குறித்து அறிவிப்பதற்கான அதிகாரம் கிடைக்கும் என தெரிவித்துள்ள அவர் மாதஇறுதியில் அறிவிப்பு வெளியாகலாம்எனதெரிவித்துள்ளார்.

## இனவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதவாதம், அடிப்படைவாதம் இவை அனைத்தும் அரசியலுடன் ஒன்றிப்பிணைந்துள்ளன. தேர்தல் முறைமையே இதற்குக் காரணமாகும்.

இனஅடிப்படையில்எமதுநாட்டில் கட்சிகள் இருக்கும்வரை நாட்டில் ஜனநாயகம் தலைதூக்க முடியாது. அதனால் ஜனநாயகம் தலைதூக்க வேண்டுமானால் இனவாத முறையில் கட்சி அமைப்பதைத் தடை செய்யவேண்டும். அதற்குத் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

எமது அண்டை நாடான இந்தியாவில் இனவாத மதவாத அடிப்படையில் கட்சிகள் இல்லை. அந்த முறையில் எமக்கும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஜனநாயக நாடுகளில் இவ்வாறான முறைமைகள் இல்லை.

எமது நாட்டிலிருந்த ஆட்சியாளர்கள் அடிக்கடி அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளும்போது. தங்களின் அல்லது அவர்களின் கட்சியின் நலனுக்காக இந்த இனவாத, மதவாத நடவடிக்கைகளுக்கு இடமளித்தே அதனை மேற்கொண்டுள்ளனர். அதனால் அடிப்படைவாதம் எந்த உருவத்தில் வந்தாலும் அதற்கு நாங்கள் இடமளிக்கக்கூடாது.

அதனால் இனவாத மதவாதத்துக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவருவதுடன் முடித்துக்கொள்ளாமல் இதற்கு எதிராகத் தேவையான சட்டங்களை இயற்றுவதற்குநாங்கள்நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்குஎங்களால் முடிந்த அர்ப்பணிப்பைமேற்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அத்துடன் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பல்வேறு விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறன. என்றாலும் பாதிக்கப்பட்வர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது.

அதேநேரம் இந்தத் தாக்குதல் தொடர்பில் இன்னும் ஒருசில தரப்பினருக்குச் சந்தேகம் இருந்து வருகிறது. என்றாலும் இவ்வாறு சந்தேகங்களை வைத்திருப்பது பயங்கரமான விடயமாகும். சமூகத்தில் இவ்வாறு சந்தேகம் இருப்பதன் எதிர்வினை எந்த வகையில் வெளிப்படும் என்பது தெரியாது. அதனால் தாக்குதல் தொடர்பில் ஏதாவது ஆதாரங்கள் இருக்குமானால் அது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதே யோக்கியமாகும்.

அதேபோன்று இனவாத மதவாத அடிப்படைவாதிகளை புனர்வாழ்வளிக்க நான் 2022இல் புனர்வாழ்வு சட்டமூலம் கொண்டுவந்தபோது, அதற்கு எதிராக எதிரக்கட்சிகள் அனைத்தும் எனக்கு எதிராக பெரும் குற்றச்சாட்டு முன்வைத்தன.

போராட்டக்காரர்களை புனர்வாழ்வு அளிப்பதற்கே இந்த சட்டம்கொண்டுவருவதாகதெரிவித்து இதனைதடுத்தார்கள். அன்று இந்தச் சட்டத்தை அவ்வாறே கொண்டுவர இடமளித்திருந்தால், எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு இன்று இந்த பிரேரணையை கொண்டுவர தேவை ஏற்பட்டிருக்காது. அதற்காக எதிர்கட்சி உறுப்பினர்கள் என்னிடம் மன்னிப்பு கோரவேண்டும்.

எனவே மீண்டும் இந்த புனர்வாழ்வு சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு இனவாத அடிப்படைவாத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைபுனல்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## உரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் உயர்நீதிமன்றத்தினால் 03 சந்தர்ப்பங்களில் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சியின கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, சாத்தியமான முதல்நாளில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறும் தேர்தலை சுதந்திரமான மற்றும் நியாயமான சூழ்நிலையில் நடத்துவதற்கு அதிகபட்ச சட்ட அதிகாரத்தை பயன்படுத்துமாறும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எதிர்க்கட்சிகள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

## வலுவான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கி வைக்கும் வகையில் நேற்று நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

# யுனெஸ்கோ பணிபாளர் இலங்கை வருகின்றார்

ஐக்கிய நாடுகள் கல்வியியல், விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பின் (யுனெஸ்கோ) பணிப்பாளர்நாயகம்ஒட்ரேஅசோலே உத்தியோகபூர்வபயணமாகஜூலை 16இலங்கைக்குவருகைதரவுள்ளார்.

இலங்கை அரசின் அழைப்பின் பேரில் இடம்பெறவுள்ள இந்தப் பயணத்தின்போது யுனெஸ்கோ அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அசோலே ஜூலை 19 வரை நாட்டில் தங்கியிருப்பார்.

அவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோரைச் சந்தித்து இலங்கைக்கான ஒத்துழைப்புக்களை மேலும் விரிவுபடுத்துதல் உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார்.

அதேவேளை இலங்கை யுனெஸ்கோஅமைப்பில்இணைந்து 75 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையைமுன்னிட்டுகொழும்பிலுள்ள நெலும் பொக்குனவில் நடைபெறவிருக்கும் நிகழ்விலும் அவர் பங்கேற்பவுள்ளார்.

யுனெஸ்கோ அமைப்பினால் உலக மரபுரிமையாகப் பிரகடனப் படுத்தப்பட்ட இலங்கையிலுள்ள இடங்களுக்கும்அவர்நேரில்சென்று பார்வையிடுவார்.

# புதிய சட்ட மா அதிபர் நேற்றுப் பதவியேற்பு

புதியசட்டமாஅதிபராகஜனாதிபதி சட்டத்தரணிகே. ஏ.பாரிந்தரணசிங்க ஜனாதிபதிஅலுவலகத்தில்ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கமுன்னிலையில நேற்று பதவியேற்றுக்கொண்டார்.

அரசமைப்பின் 61 ஈ (ஆ) பிரிவின்படி வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கு அமைவாக ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவினால் இந்தநியமனம்வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.ஏ.பாரிந்த ரணசிங்க இலங்கையின் 49ஆவது சட்ட மா அதிபராகியிருக்கிறார். இந்த பதவியேற்பு நிகழ்வில்ஜனாதிபதியின்செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்து கொண்டார்.

டொங்ஷியா நிறுவனம் 2018 இலங்கையில் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. வங்குரோத்து அடைந்த பின்னரும் இலங்கையில் புதிய தொழிற்சாலையை ஆரம்பித்துள்ளது. அதனால் 400 பேருக்கு வேலை வாய்பை வழங்க முடிந்துள்ளது. இந்தத் தொழிற்சாலை இளையோருக்கு சிறந்த எதிர்காலத்தை தோற்றுவிக்கும். நாட்டில் இதுபோன்றபல தொழிற்சாலைகள் உருவாகவேண்டும்.

பிங்கிரியபிரதேசத்தைமுதலீட்டு வலயமாக அபிவிருத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவேண்டும். அதற்காகவே 2018 ஆம் ஆண்டில் பிங்கிரிய பொருளாதார வலயத்தை ஆரம்பித்தோம். இன்றுமேலும்1000 ஏக்கர்களை இந்த வலயத்தோடு இணைத்திருக்கிறோம்.

நாம் மிகக் கஷ்டமான காலத்தை கடந்து வந்திருக்கிறோம். நாடாளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனத்தை கொண்டிருந்த கட்சிக்கு ஜனாதிபதி பதவியை வழங்க வேண்டிய நிலைமை வந்தது. உலகில் எங்கும் அவ்வாறு நடந்ததில்லை. .

கடன் மறுசீரமைப்பினால் மீளச் செலுத்த வேண்டியிருந்த கடன் தொகையில் 8 பில்லியன் டொலர் நிவாரணம்கிடைத்திருக்கிறது. கடன் செலுத்துவதற்கான காலத்தையும் 2043 வரையில் நீடித்துள்ளோம். அதனால் நாட்டின் பொருளாதாரம் மூச்சு விடும் நிலைமையை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் சரிவடையலாம். எமது ஏற்றுமதி வருமானத்தைவிட இறக்குமதி செலவுஅதிகமாகஉள்ளது. இவ்வாறு முன்னோக்கிச்சென்றால் இன்னும் பதினைந்து வருடங்களில் மீண்டும் வங்குரோத்து நிலைவரும்.

அதனால்வெளிநாட்டுகடன்களை முகாமைத்துவம் செய்து சிறந்த பொருளாதாரமுறைமையைப்பேண வேண்டும். வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகள் ஏற்றுமதி பொருளாதாரத்தினால் முன்னேறியுள்ளன. இலங்கை இன்னும் ஒரே இடத்தில் நிற்கிறது.

அதனால் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை பாதுகாத்துகொண்டு நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். ஏற்றுமதி பொருளாதாரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று திறக்கப்பட்ட பொருளாதார வலயம் ஏற்றுமதி பொருளாதாரத்துக்கு சிறந்த முன்னுதாரணமாகும்.

ஏற்றுமதி பொருளாதாரம், உற்பத்தித் துறைகள், சுற்றுலா, தொழில்நுட்பம், நவீன விவசாயம் உள்ளிட்ட துறைகளின் ஊடாக வலுவான பொருளாதாரத்தை ஏற்படுத்த முடியும். அதற்குத் தேவையான அடித்தளத்தை ஆளும்தரப்பு இட்டுள்ளது. இந்த வேலைத் திட்டங்களைப் பாதுகாப்பதால் எதிர்காலம் சிறப்பானதாக அமையும்.

அதேபோல் இந்தப் பகுதியில் ஜரி வலயமொன்றைக் கட்டமைக்கும் பணிகளும்ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனங்களின் தோட்டங்களை நவீன விவசாயத்துக்காக பயன்படுத்திகொள்ள எதிர்பார்க்கி றோம்.

இந்த ஏற்றுமதி வலயம் மேம்படுத்தப்பட்ட பின்னர் புதிய வீடுகள், நகரங்கள் மற்றும் பிரதேச மக்களுக்கான வியாபார வாய்ப்புக்களும் உருவாகும். அதன்படிவிவசாயம், தொழில்துறை, உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா வர்த்தகம், மீன்பிடித்துறை ஆகியவற்றை மேம்படுத்துவதன் ஊடாக பிங்கிரியவை இந்நாட்டின் பிரதான பொருளாதார வலயமாக மாற்றியமைக்க எதிர்பார்ப்பதோடு, இதற்கு இணையாக பன்னல, குளியாபிட்டிய பகுதிகளிலும் பெரும் அபிவிருத்தி ஏற்படும். இதனால் மாதம்பை பகுதியில் முற்காலத்தில் காணப்பட்ட செழிப்பை மீண்டும் ஏற்படுத்த முடியும்.

நாட்டுக்குள் புதிய பொருளாதார மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த மாற்றத்துக்கான சிறப்பிடமாக பிங்கிரியவை குறிப்பிடலாம். பிங்கிரிய, இரணவில உள்ளிட்ட பகுதிகளில் புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். நீங்கள் அனைவரும் அதன்பங்குதாரர்கள்ஆகவேண்டும் - என்றார்.

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வாய்வு: மேலும் 3 மனிதஎலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்பு







முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாய்வின், ஏழாம்நாள் அகழ்வாய்வுப் பணிகளின்நிறைவில்மூன்றுமனிதஎலும்புக்கூட்டுத்தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாங்கட்ட அகழ்வாய்வின், ஏழாம்நாள் அகழ்வாய்வுச் செயற்பாடுகள்ஜூலை11வியாழக்கிழமைமுன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் தடயவியல் பொலிஸார், உள்ளிட்ட தரப்பினரால் பங்குபற்றுதல்களுடன் இந்த ஏழாம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றன.

அதேவேளை மூன்றாவது நாளாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அலுவலகத்தின், மனித உரிமைகள் அலுவலர் லுடியானா ஷெல்ரின் அகிலன் கண்காணிப்பில் ஈடுபட்டுவருவதுடன், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பான சட்டத்தரணிகளும் அகழ்வு பணிகளை கண்காணிப்புச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தவகையில், தொடர்ச்சியாக இடம்பெறும் அகழ்வாய்வுப் பணிகளில் அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளிலிருந்து இவ்வாறு மூன்று மனித எலும்புக்கூட்டுத்தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் இதற்கு முன்னர் இடம்பெற்ற இரண்டுகட்ட அகழ்வாய்வுகளின்போது 40மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அகழ்ந்தெடுக்கப்பட்ட மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளுடன் மொத்தம் 43 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

## 6 மாத கர்ப்பிணி பெண் மாயம் பொலிஸார் தீவிர விசாரணை



மொனராகலை, கொவிந்துபுர பொலிஸ்பிரிவுக்குட்பட்ட அம்பாறைவீதி 7 ஆவது மைல்கல் அருகில் வசிக்கும் 6 மாத கர்ப்பிணிப் பெண் ஒருவர் கடந்த 9 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளார் என கொவிந்துபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கர்ப்பிணிப் பெண் கடந்த 9 ஆம் திகதி காலை 10 மணியளவில் தனது மூத்த மகளுடன் வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் தனது தாய் வீட்டிற்குச் செல்வதாகக் கூறி மூத்த மகளை மாத்திரம் வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்நிலையில், இந்த கர்ப்பிணிப் பெண் மீண்டும் வீடு திரும்பாததால் அவரது கணவர் இது தொடர்பில் கடந்த 10 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

காணாமல்போன கர்ப்பிணிப் பெண்ணின் கணவர் இது தொடர்பில் பொலிஸாரிடம் தெரிவிக்கையில்,

எனது 6 மாத கர்ப்பிணி மனைவியின் வாட்ஸ் அப் இலக்கத்திற்கு மனைவியின் வங்கி கணக்கிற்கு 50 இலட்சம் ரூபா பணம் அனுப்புமாறும் இது தொடர்பில் பொலிஸாருக்கு தெரிவித்தால் மனைவியின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனவும் குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

எனது மனைவி வயிற்றில் உள்ள கருவைக் கலைப்பதற்குப் பல முறை முயற்சி செய்திருந்தார். ஆனால் கருக்கலைப்பதற்கான காலம் தாமதமானதால் கருக்கலைப்பது கடினம் என நான் கூறினேன். இதனால் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது எனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொவிந்துபுர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

## போலியாக தயாரித்த அழகு சாதன பொருள்களை விற்ற இருவர் கைது


கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலதா வீதியில் போலியாக தயாரிக்கப்பட்ட அழகு சாதனப் பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மடவளை மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 42 மற்றும் 60 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## பொத்துவில் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளர் கடமையேற்பு



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளராக சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் புதன்கிழமைதமது கடமையேற்றுக் கொண்டார்.

அம்பாறைஅரசாங்கஅதிபர்சிந்தக்கஅபேவிக்கிரம தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் உள்ளிட்ட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் குழாம் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலக முன்னாள் பிரதேச செயலாளர் சட்டத்தரணி. பிர்னாஸ் இஸ்மாயில் அவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் உதவிப் பிரதேச செயலாளர் எம். ராமக்குட்டி, கணக்காளர் எஸ்.எம்.ஹாறுன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஜனாப். சப்ரி நிருவாக உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)





காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மாவட்டச் செயலர் நியமன அரசியல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி இரண்டு மாவட்டங்களுக்கும் நிரந்தரமான அரச செயலாளர்கள் நியமிக்கப்படவில்லை. பதில் செயலாளர்களே நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த மாவட்டங்களில் கடமையாற்றி வந்த செயலாளர்கள் ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு முதலில் கடமை நிறைவேற்றுச் செயலாளர்களாக மேலதிக மாவட்டச் செயலர்கள் நியமிக்கப்பட்டார். பின்னர் அண்மையில் அவர்களுக்கு பதில் மாவட்டச் செயலர் பதவிகள் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவால் அண்மையில் கொழும்பில் வழங்கி வைக்கப்பட்டது. இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் பலவற்றுக்கும் நிரந்தர மாவட்டச் செயலர்கள் நியமிக்கப்பட்ட நிகழ்விலேயே யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு பதில் செயலாளர்கள் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிலையில் நேற்று யாழ்ப்பாணத்தில் பிரதமர் முன்னிலையில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விவகாரத்தைச் சுட்டிக்காட்டினார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். உடனடியாக இரு மாவட்டங்களுக்கும் நிரந்த செயலாளர்களை நியமிக்கும்படி அவர் பிரதமரிடம் வலியுறுத்தினார். ஏனெனில் மாவட்டச் செயலாளர்களை நியமிக்கும் அதிகாரம் மிக்கவர் பிரதமர்தான். அது குறித்து உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதாக பிரதமர் உறுதியளித்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று வரும் நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நிரந்தரச் செயலாளர்கள் இல்லாமல் இருப்பது பெரும் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்பதையும் சுமந்திரன் பிரதமரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். தேர்தல் சமயங்களில் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலராக மாவட்டச் செயலர்களை நியமிப்பதே நடைமுறை. கிளிநொச்சியும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திற்குள் அடங்குவதால் யாழ். மாவட்டச் செயலரே இரு மாவட்டங்களுக்குமான தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலராக நியமிக்கப்படுவது வழமை. நிரந்தர மாவட்டச் செயலாளர்கள் இல்லாத பட்சத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல்கள் திணைக்களத்திலிருந்து அதிகாரி ஒருவரை தெரிவத்தாட்சி அலுவலராக விசேடமாக நியமிக்கும், அப்படி நியமித்தால் அது அது தேவையற்ற குழப்பங்களுக்கு வழிகோலும் என்றும் பிரதமரிடம் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரது விளக்கத்தைத் தொடர்ந்து உடனடியடாக நிரந்தர மாவட்டச் செயலர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது நிர்வாக அமைச்சு அதிகாரிகளுக்கு பிரதமர் உத்தரவிட்டார் என்றும் தெரிகின்றது. தேர்தலுக்கு முன்பாக இரு மாவட்டங்களுக்கும் நிரந்தர மாவட்டச் செயலர்கள் நியமிக்கப்படுவதே சிறந்தது.

வழக்கமாக மாவட்டச் செயலர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டால், விண்ணபம் கோரப்பட்டு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்படுவதுதான் வழமை. ஆனால், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அந்த நடைமுறைகள் எவையும் பின்பற்றப்படவில்லை. இந்த முறை கடமை நிறைவேற்று மற்றும் பதில் மாவட்டச் செயலர்களைக் கொண்டு கடமைகளை ஒப்பேற்றிவிட அரசியல் அழுத்தங்கள் வழங்கப்பட்டன என்பதை அறிய முடிந்தது. நிரந்தர மாவட்டச் செயலர்களைத் தவிர்த்து பதில் செயலர்களை வைத்திருப்பதன் மூலம் தாம் விருப்பிய சில பல காரியங்களை ஆற்ற முடியும் என்று அந்த அரசியல் தரப்புக்கள் கருதியதே அதற்குக் காரணம் என்றும் தெரியவருகின்றது.

தற்போது பதில் கடமையாற்றும் இருவரும் இன்னும் நிரந்தரமாக அந்தப் பதவியை வகிப்பதற்கு வேண்டிய நிர்வாகத் தர நிலையை அடையவில்லை. மாவட்டச் செயலாளர்களாகப் பதவி வகிப்பதற்கு இலங்கை நிர்வாக சேவைத் தரத்தின் சிறப்பு நிலையை அவர்கள் பெறவேண்டும். பதில் கடமையாற்றும் இருவரும் தற்போது நிர்வாக சேவையின் முதல் தர நிலையில் இருப்பவர்கள். அவர்களுக்குச் சிறப்புத் தர நிலை கிடைப்பதற்கு இன்னும் சில காலம் எடுக்கும். அதேநேரம் சிறப்புத் தர நிலையுடன் வேறு சிலர் நிர்வாக சேவை சிறப்புத் தரநிலையில் இருக்கின்றனர். எனினும் அவர்களுக்கு மாவட்டச் செயலர் பதவி வழங்கப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே அவர்களுக்கு மாகாண சபைக்குள் வேறு பதவிகள் வழங்கப்படும் வரை காத்திருந்து பதில் மாவட்டச் செயலர் நியமனங்கள் வழங்கப்பட்டன என்கிற குற்றச்சாட்டும் உண்டு.

எப்போதும் நிர்வாக விடயங்களில் தேவையற்ற அரசியல் தலையீடுகள் மூலமாகவே எப்போதும் குழப்பங்களும் தவறுகளும் நிகழ்கின்றன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி விவகாரங்களிலும் அதுவே நடக்கின்றது. இப்போது இந்த விடயம் பகிரங்கமாக பிரதமரின் கவனத்திற்கு நேரடியாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இனியாவது நிலமை சீர் செய்யப்படுமா தேர்தல் நியாயமான ரீதியில் நடக்க வழி ஏற்படுத்தப்படுமா என்பதைப் பார்க்கக் காத்திருக்கின்றனர் மக்கள்.



# வாய்விட்டுச் சிரிப்பதை கட்டாயமாக்கிய ஜப்பான்

வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பது பழமொழி. சிரிப்பதால் கிடைக்கிற மருத்துவ பயன்களை கருத்தில்கொண்டு ஜப்பானின் ஒரு மாகாணத்தில் சிரிப்பதை கட்டாயப்படுத்த கடந்த வாரம் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.



ஜப்பானின் யமகாட்டா ப்ரீஃபெக்சர் அரசு, மாகாணத்தில் உள்ள மக்கள் நாளொன்றுக்கு ஒருமுறை வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் என்பதை கட்டாயமாக்கி சட்டமியற்றியுள்ளது. பணியிடங்களில் சிரிப்பதற்கான சாதகமான சூழலை உருவாக்கவும் அலுவலக நிர்வாகங்களுக்குக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சுதந்திர ஜனநாயக கட்சி (எல்டிபி) இதனை சட்டமாக இயற்றியுள்ள நிலையில் இதற்கு எதிர்ப்பும் கிளம்பியுள்ளது. சிரிப்பதும் சிரிக்காமல் இருப்பதும் மனிதர்களின் அடிப்படை உரிமை என எதிர்க்கட்சிகள் வாதிடுகின்றன. சிரிக்க இயலாதவர்களை சட்டம் கட்டாயப்படுத்த முடியாது என அவை தெரிவிக்கின்றன.

இந்த சட்டம் யமகாட்டா பல்கலைக்கழகத்தின் மருத்துவர்கள் குழுவால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. தொற்றுநோயியலுக்கான இதழில் 2020-ல் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையில், ஆய்வாளர்கள் 40 வயதுக்கு அதிகமான 17,152 பேரிடம் தரவுகள் சேகரித்தனர்.

அந்த அறிக்கையில் இறப்புக்கான அனைத்துவிதமான காரணங்கள் மற்றும் இதய தொடர்புள்ள நோய்கள் ஏற்படுவது குறைவாக சிரிப்பவர்களுக்கு அதிகமாக பாதிப்பு ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டது.

சிரிப்பதற்கு என்றே மாதத்தில் ஒரு நாளை இந்த சட்டம் ஒதுக்கியுள்ளது. ஒவ்வொரு மாதமும் எட்டாவது நாள் மக்கள் சிரிப்பதன் மூலம் தங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்த கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சிரிக்காமல் இருந்தால் எந்தவித தண்டனையும் கொடுக்க சட்டத்தில் இடம் கொடுக்கப்படவில்லை. உடல் மற்றும் மனநலனுக்காக இதனை கட்டாயமாக்கவுள்ளதாக மாகாண அரசு அறிவித்துள்ளது.

ஜப்பானின் சில சட்டங்கள் எப்போதும் வெளிநாட்டவர்களுக்கு விநோதமாகதான் இருக்கும். உதாரணமாக ஜப்பானில் ரூபாய் நோட்டுகளை சேதப்படுத்தினால் ஒரு வருடம் வரை சிறைத் தண்டனைவிதிக்கப்படும். ஒருவருடன் சண்டையிட்டு மோதியதால் யாரேனும் உயிரிழந்தால் அவருக்கு காப்பீடு நிறுவனம் ஆயுள் காப்பீடு உரிமை தொகை தருவதை மறுக்கலாம்.

அதேபோல, ஒதுக்கப்பட்ட நாளை தவிர மற்ற நாள்களில் வீட்டின் குப்பைகளை வெளியே எடுத்துவந்தால் அதற்கு அபராதம் விதிக்கப்படும்.

சிரிப்பது மனித இயல்பானது. வேடிக்கைக்கு சொல்லப் போனால் விலங்குகளிடமிருந்து நம்மை வேறுபடுத்துவதே அந்த சிரிக்கும் பண்புதான். அதனை சட்டத்தின் மூலம் கொண்டுவரும் அளவுக்கு நிலை மோசமாகியுள்ளதை இந்த சூழல்கள் காட்டுகின்றன.



காலைக்கதிர் Kalaikkathir

## சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் 2024 ஆண்டுக்கான அரையாண்டு அணிவகுப்பு



(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2024 ஆண்டிற்கான அரையாண்டு அணி வகுப்புமரியாதைமற்றும்பரிசோதனை பொலிஸ் நிலைய மைதானத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் தலைமையில்நடைபெற்றஇந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக்கொண்டார்.



மேலும் பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவைபிரிவுநிலையங்கள்சுற்றுசூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகளை பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும்வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் சம்மாந்துறை, பெரியநீலாவணை, சாய்ந்தமருது, பொலிஸ் நிலையபொலிஸாரும்இணைந்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.(05)

## பொலிஸ் பாவனையிலிருந்த கலாசார மண்டபம் கல்முனை மாநகர சபையினால் பொறுப்பேற்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

பொலிஸாரின் பாவனையில் இருந்து வந்த பெரிய நீலாவணை கலாசார மண்டப வளாகம் கல்முனை மாநகர சபையால் முழுமையாக பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபைக்கு சொந்தமான இந்த வளாகம் மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸின் வேண்டுகோளின் பேரில் - பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்தால் கையளிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பெரிய நீலாவணை கலாசார மண்டப வளாகத்தில் இருந்து பொலிஸார் வெளியேறியுள்ளதுடன் இப்பொலிஸாரின் விடுதி வசதிக்காக கல்முனை மாநகர சபையால் மாற்று இடம் ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த 2021 ஆம் ஆண்டு பிற்பகுதியில் மாகாண சபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு வேலைத் திட்டத்தின்கீழ் பெரிய நீலாவணையில் கலாசார மண்டபம் ஒன்றை நிர்மாணிக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, முதலாம் கட்டப் பணிகள் முடிவுற்று- இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் பெரிய நீலாவணையில் புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் இதனைத் தற்காலிகதங்குமிட விடுதியாகப்பயன்படுத்தி வந்தனர்.

தற்போது இந்தக் கலாசார மண்டபத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கிருந்து பொலிஸாரின் விடுதியை இடமாற்றுவதற்கான நடவடிக்கைகளை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் மேற்கொண்டிருந்தார்.

இதனால் கலாசார மண்டப நிர்மாணப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் காணப்பட்ட தடைகளும் சிக்கல்களும் நீங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.(05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml
Milk Drink
Cocacola M
Pepsi M
Coca Cola Tin - 250/=

# முஸ்லிம் அதிபர்களின் வினைத்திறமை தடைகாண் பெறுபேறு இடைநிறுத்தம்:

திருமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை உறுதியளித்தபடி வெளியிட்டமைக்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு நன்றி தெரிவிப்பதாகவும், அதேபோன்று, 13 முஸ்லிம் அதிபர்களின் வினைத்திறமை தடைகாண் பரீட்சை பெறுபேறுகளையும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது, ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்த ரிஷாத் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு -

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் நான் நீண்டகாலம் இணைந்து பணியாற்றியுள்ளேன். அந்தவகையில், அவர் ஒரு இனவாதி அல்லர். இன, மத பேதமின்றி அனைத்து மக்களையும் சமமாக நடத்துபவர். எனவே, கல்வித் திணைக்களம் மற்றும் பரீட்சைத் திணைக்களம் ஆகியவற்றில் இடம்பெறும் குளறுபடியான நடவடிக்கைகளுக்கும் பாரபட்சமான அணுகுமுறைகளுக்கும் சில அதிகாரிகளே காரணம் என்பதை என்னால் கூற முடியும். எனவே, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் வராமல் தடுப்பதற்காக சுற்றுநிருபம் ஒன்றை உடனடியாக வெளியிடுவது சிறந்ததாகும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதற்கு உடனே பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில், நிலைமையை ஆராய்ந்து, அதிபர்களின் பரீட்சை பெறுபேறுகளை ஒரு வாரத்துக்குள் வெளியிட நடவடிக்கை எடுப்பதாக மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத்திடம் உறுதியளித்தார்.(05)

# இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவருடன் தௌபீக் சந்திப்பு



(கே எ ஹமீட்)

நாடாளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தௌபிக் இலங்கைக்கான சவூதி அரேபிய நாட்டின் தூதுவர் ஹாலித் ஹமூத்என். அல்-கஹ்தானி அவர்களை வியாழக்கிழமை கொழும்பில் அமைந்துள்ள சவூதி அரேபியத் தூதரகத்தில் சிநேகபூர்வமாக சந்தித்தார். (05)

# வரிசை யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் எங்கள் ஜனாதிபதி

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்



(யூ.கே.காலித்தீன்)

பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குள், நாடு சிக்கித்தவித்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், யாரும் நாட்டை முன்கொண்டு செல்ல ஆயத்தமில்லாத நிலையில் தனியாக தைரியமாக முன்வந்து, தனது அறிவின் முதிர்ச்சியின் காரணமாக நாட்டில் காணப்பட்ட வரிசை யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் எங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் சட்டத்தரணியுமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் நிர்வாக மற்றும் கேட்போர் கூடம் உள்ளிட்ட மூன்று மாடிகளைக்கொண்ட பாடசாலை கட்டடத்தொகுதிக்கு அடிக்கல் நாட்டு வேலைகளை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ், 1977 ஆம் ஆண்டிலிருந்து (2020 ஒகஸ்ட் முதல் 2021 ஜூன் வரை ஒரு பத்து மாத இடைவெளியைத் தவிர) அனைத்து நாடாளுமன்றங்களிலும் நாடாளுமன்ற உறுப்பினராக சேவையாற்றிய இலங்கையின் மிகவும் மூத்த, அனுபவமிக்க ஒருவராவார்.

பொருளாதார ரீதியில் மிகமோசமான நிலையிலிருந்த நாட்டினை கட்டியெழுப்பி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் மீண்டுவரும் இன்றைய சூழலில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதியொதுக்கீடுகளை செய்து நாட்டின் அவசர அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உதவி வருகின்றார். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் சீரழிவைத் தடுத்து நிறுத்த, தனது நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் வழங்குவதற்காக ஓர் இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக பதவியேற்று அதன் பின்னர் அரசியலில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக ஜனாதிபதியாக பாரமெடுத்து இன்று வரை இந்நாட்டினை பொருளாதார ரீதியிலும், அபிவிருத்திரீதியிலும் எடுத்துச்செல்கின்றவர்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இவ்வாறான திட்டத்தின் பிரகாரமே, நான் ஜனாதிபதி அவர்களிடம் பேசி குறித்த கட்டட நிர்மாணத்துக்கானநிதியைபெற்றுக்கொண்டேன் என்றும் தெரிவித்தார்.

சுமார் 10.5 கோடி நிதிச்செலவில் கட்டி முடிப்பதற்குத்திட்டமிடப்பட்டுள்ள குறித்த கட்டடத் தொகுதியின் ஆரம்பக் கட்டமாக 60 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த வேலைகளை 180 நாள்களுக்குள் முடிவுறுத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கல்லூரியின் பவளவிழா நிகழ்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொள்வார் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார். திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் எடுத்துக்கொண்ட முயச்சியின் காரணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விஷேட நிதி ஒதுக்கீட்டின் மூலமே இக்கட்டடத்துக்கான நிதியினை வழங்கியிருந்தார்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் நிகழ்வுக்கு கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரமவும் விஷேட அதிதிகளாக கல்முனை பிராந்திய கல்வி அதிகாரி சஹ்துள் நஜீம், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாக்கத் அலி, அம்பாறை மாவட்ட செயலகத்தின் பிரதம பொறியலாளர் எம்.ஏ.எம். ஸாகீர் உள்ளிட்ட அதிதிகளுடன் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்மா பெரிய பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா (ரஷாதி), பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் டாக்டர் சனூஸ் காரியப்பர், பழைய மாணவர் சங்கத்தின் செயலாளரும் நீதிக்கான மையத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான ஷஹ்பி எச். இஸ்மாயில், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ. பாவா மற்றும் பிரதேச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், முன்னாள் அதிபர்கள் பிரதி அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(05)

முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## 19 கல்வியியல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

தற்போதைய கல்வி மறுசீரமைப்புச் செயற்பாட்டின் ஊடாக இந்நாட்டின் கல்வித் துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்படும் என நாம் நம்புகின்றோம். குறிப்பாக தொழிற் சந்தையை இலக்காகக் கொண்டு, ஐநூறுக்கும் மேற்பட்ட கொரிய, ஜெர்மன், பிரெஞ்சு, ஹிந்தி, சீன மற்றும் ஜப்பானிய மொழி ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டில் உள்ள 19 கல்வியியல் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களாக மாற்ற எதிர்பார்க்கின்றோம். அந்தப் பல்கலைக்கழகங்களில் இருந்து 4 வருடங்களின் பின்னர் பட்டதாரி ஆசிரியர்கள் உருவாகுவார்கள். இதன் மூலம் தற்போது கல்வியியல் கல்லூரிகளில் இணையும் 5,000 மாணவர்களின் எண்ணிக்கையை 7,500 ஆக அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் 7500 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ச்சி பெறுவார்கள். மேலும், விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காக பாடசாலைகளில் உள்ள வசதிகளை மேலும் அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு பயிற்றுவிக்க, பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வலயக்கல்விஅலுவலகங்களின் எண்ணிக்கையை 120 ஆக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், இதுவரை வழங்கப்படாத ஆசிரியர் நியமனங்கள், மூன்றாம் தரநிலை அதிபர் நியமனங்கள் மற்றும் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் நியமனங்கள் என்பனவும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின்படி, கல்வித்துறையில் மேற்கொள்ளப்படும் இந்த மறுசீரமைப்புப் பணிகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதுதொடர்பில் ஜனாதிபதியின் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகளில் பணம் அறவிடுவது சட்டவிரோதமானது எனவும் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. இவ்வாறு பணம் அறவிடுவதைத் தடுக்க பெற்றோரும் ஒத்துழைக்க வேண்டும்.

ஆசிரியர் சேவை என்பது இந்நாட்டின் எதிர்கால சந்ததியை உருவாக்கும் துறையாகும். மற்றவர்களைவிட அவர்களுக்கு அதிக பொறுப்பு உள்ளது. எனவே, தங்கள் மனச்சாட்சிப்படி செயல்பட வேண்டும். ஆனால், இந்தப் பணிப்புறக்கணிப்புகள்தொடர்ந்தால் தொழிற்சங்கங்கள் பெரும் பாதிப்பை சந்திக்க நேரிடும் என்பதை அவர்கள் தற்போது உணர்ந்துள்ளனர். எனவே, அவர்கள் வெவ்வேறு கதைகளைக் கூறினாலும், அவர்கள் எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் தற்போது தோல்வியடைந்துள்ளன.

மலையகத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாகவும் தற்போது பிரச்சினை எழுந்துள்ளது. நாளாந்த சம்பளம் 1700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, முதலாளிமார் சம்மேளனம் நீதிமன்றம் சென்றுள்ளது. இதற்கு முன்னர் சம்பளம் அதிகரிக்கப்பட்டபோதும் இதேபோல் அவர்கள் நீதிமன்றத்துக்குச் சென்றாலும் கூட அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதேபோன்று இம்முறையும் அவ்வாறே இந்த சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு நீதிமன்றம் தீர்ப்பை வழங்கும் என்பதில் தொழிற்சங்கங்களாகிய எமக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆட்சிக்கு வந்த பின்னர், அரச ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது. தனியார் துறையினரின் சம்பளமும் அதிகரித்துள்ளது.

உலகில் எந்த நாட்டிற்குச் சென்றாலும் அங்கும் மக்களின் வாழ்க்கைச் செலவு தற்போது அதிகரித்துள்ளது. குறிப்பாக கொரோனா தொற்றுக்குப் பின்னர் சர்வதேச ரீதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த நிலைமை தோன்றியுள்ளது. எமது நாடும் அதற்கு முகம்கொடுத்தது. ஆனால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமை, தற்போது மாறியுள்ளது. பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளதன் காரணமாக, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி இன்று வலுவடைந்துள்ளது.

மக்கள் சரியாகச் சிந்திந்து தமது முடிவுகளை எடுப்பார்களாயின், நாட்டை அதளபாதாளத்தில் இருந்து மீட்டெடுத்து நாட்டைக் காப்பாற்றிய தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். அதுதான் சரியான முடிவாகவும், மக்களுக்கான தீர்வாகவும் இருக்க முடியும் - என்றார்.

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் தொலைக்காட்சியின் காலை நேர நிகழ்ச்சியில் சபையில் நான் குறிப்பிடாத பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நிறுவனத்தின் பிரதானி ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடவுள்ளதால் எம்மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது.

கல்வி அமைச்சராக நான் என்ன செய்தேன் என்று இந்த நிகழ்ச்சியின் போது கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. நெருக்கடியான சூழ்நிலையில் தான் நான் கல்வி அமைச்சராகப் பதவியேற்றுள்ளேன். யுத்தக் காலத்தில் கூட பரீட்சைகள் முறையாக நடத்துவதற்கு உரிய ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளேன். யுத்த காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய பரீட்சைகள் முறையாக நடத்தப்பட்டன.

2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது கல்வி அமைச்சராகப் பதவியேற்றேன். பல்வேறு தரப்பினரது ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொண்டு மாணவர்களுக்கு சீருடைகளையும், பாடப்புத்தகங்களையும் பெற்றுக்கொடுத்துள்ளேன். கல்வி அமைச்சராக நான் என்ன செய்தேன் என்பதற்குப் பாடசாலை மாணவர்கள் பதிலளிப்பார்கள்.

இந்த தொலைக்காட்சி நிறுவனத்தின் பிரதானி ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார் என்று குறிப்பிடப்படுகிறது. மஹிந்த சுழுங்கவை மீண்டும் புதுப்பிப்பதாக இவர்கள் குறிப்பிட்டுக்கொள்கிறார்கள். ஜனாதிபதி தேர்தலுக்காகக் காலையில் கூட்டணியமைத்தார்கள் மாலை அவரது கட்சியின் தலைவர் பதவி விலகினார். இவ்வாறு தான் இவர்களின் அரசியல் நிலைமை காணப்படுகிறது.

இவரது அரசியல் பரப்புரைக்காக எம்மை விமர்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த தனியார் நிறுவனம் கடந்த காலங்களில் எவ்வாறு அரச தலைவருக்குக் கயிறு கொடுத்தது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஆகவே இந்த நிறுவனத்தை சிறப்புரிமை குழுவுக்கு அழையுங்கள் என்றார்.

## அரச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று பிரதமரின் பங்கேற்புடன் நடைபெற்றது. இணைத் தலைவர்களான ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரது தலைமைத்துவத்தின் கீழ் கூட்டம் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாகவும், குறிப்பாக அலுவலக உதவியாளர்களுக்கான வெற்றிடங்கள் அதிகரித்துள்ளதால் 'உரித்து' தேசிய வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ஆளுநர், பிரதமரிடம் கூறினார்.

ஏனைய பல திணைக்களங்களில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாகவும், அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நிரந்தர செயலாளர்களை உடனடியாக நியமியுங்கள் என்று பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கோரிக்கை விடுத்தார்.

"யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தற்போது நிரந்தர அரச அதிபர்கள் இல்லை. விரைவில் தேர்தல்கள் இடத்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் உடன் நிரந்தர மாவட்டச் செயலர்களை நியமிக்கவேண்டும்" என்றார் அவர்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் படையினர் வசம் தற்போது 3 ஆயிரத்து 571 ஏக்கர் காணிகள் இருக்கின்றன என்று கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

2 ஆயிரத்து 624 ஏக்கர் தனியார் காணிகளும், 951 ஏக்கர் அரச காணிகளும் இன்னமும் படையினர் வசம் உள்ளன. இதிலே தனியார் காணிகளில் இராணுவத்தினரிடம் ஆயிரத்து 775 ஏக்கரும், விமானப்படையினரிடம் 660 ஏக்கரும்,, கடற்படையினரிடம் 160.67 ஏக்கரும், பொலிஸாரிடம் 28 ஏக்கரும் உள்ளன.

இதேபோன்று அரச காணிகளில் இராணுவத்தினரிடம் 416.66 ஏக்கரும், விமானப் படையினரிடம் 349.82 ஏக்கரும், கடற்படையினரிடம் 179.70 ஏக்கரும், பொலிஸாரிடம் 10.34 ஏக்கரும் உள்ளன என்று புள்ளிவிவரத்தை பிரதமர் தினேஷ் குணவர்தனவின் கவனத்துக்குத் தந்தார் மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுநிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், யாழ் மாவட்ட பதில் மாவட்டச் செயலர், ஏனைய திணைக்களங்களின் செயலாளர்கள், ஆணையாளர்கள், பாதுகாப்பு பிரிவினர், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## படையினருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாமலும் முழு உரித்துடன் சொந்தமாக வழங்குவதற்கான வேலைத் திட்டம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் மக்கள் அச்சமின்றி நடமாடுவதற்காக உயிர் தியாகம் செய்த பாதுகாப்புத் தரப்பினருக்கு தாய்நாட்டில் காணித் துண்டு ஒன்றின் உரிமையை உறுதிப்படுத்துவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. அதன் தலைமையிலேயே இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் 13.-05.-2024 அன்று முன்வைக்கப்பட்ட படையினருக்கு வசிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள அரச காணிகளின் முழுமையான உரித்துகளை அவர்களுக்கே வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் மற்றும் 23.05.2024 அமைச்சரவை தீர்மானம் ஆகியவற்றின்படி இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

அனைத்துப் பிரிவு பாதுகாப்புத் தரப்பினருக்கும் சிக்கலற்ற காணியின் உரிமையை வழங்கும் இந்த தேசிய வேலைத்திட்டம் 4 மாதங்களில் பூர்த்தி செய்யப்படவுள்ளது. இது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவித்து அவர்களின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குவதற்காக நிபந்தனையின்றி முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 4 இடங்களில் ஜனாதிபதி அலுவலகத்தின் தலைமையில் நடமாடும் சேவைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.






## மோ.சைக்கிள் மோதி வயோதிபர் இறப்பு!

பேராதனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெலிஓயா - களுகமுவ வீதியில் களுகமுவ பகுதியில் மோட்டார்சைக்கிள்மோதிவயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

களுகமுவையிலிருந்து கெலிஓயா நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த வயோதிபர் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போதுபடுகாயமடைந்த வயோதிபர் பேராதனை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கெலிஓயா பிரதேசத்தைச்சேர்ந்த 74வயதுடைய வயோதிபராவார்.

உயிரிழந்தவயோதிபரின்சடலம் பேராதனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து மோட்டார் சைக்கிள் செலுத்துனர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## சத்துணவு வழங்கும் வேலைத் திட்டம்

(பி.கேதீஸ்)

சங்கர்ராஜி நினைவு அறக் கட்டளை ஊடாக தலவாக்கலை பாமஸ்டன்தோட்டசிறுவர்பராமரிப்பு நிலையம்மற்றும்சிறுவர்முன்பள்ளி நிலையத்திற்கு இலவச சத்துணவு வழங்கும் வேலைதிட்டத்தின் கீழ் அங்குள்ள பிள்ளைகளுக்கு ஒரு மாதம் முழுவதும் உட்கொள்வதற்கு தேவையான முட்டைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சங்கர்ராஜி நினைவு அறக்கட்டளையின் மத்திய மாகாண இணைப்பாளர் ராஜ்குமார், நுவரெலியா மாவட்ட இணைப்பாளர்ஆமஸ்ரோங்மற்றும் சிறுவர்கள்,பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

## ஊர்காவற்துறை யுவதி கடத்தல்

### மூவர் கைது

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பகுதியில்யுவதியொருவரைகடத்திய குற்றச்சாட்டில்மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்துறை பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றிற்கு அருகில் வைத்து, யுவதி ஒருவர் கடத்தி செல்லப்பட்டார்.

சம்பவம்தொடர்பில்அப்பகுதியில் நின்றவர்களால் ஊர்காவற்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைஅடுத்துபொலிஸார் நடவடிக்கைகளில் இறங்கினார்கள்.

அதற்கிடையில் கடத்தி சென்ற யுவதியைஊர்காவற்துறைபிறிதொரு பகுதியில் வீதியில் இறக்கி விட்டு, கடத்தி சென்ற நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இருந்தபோதிலும்பொலிஸாரின் தீவிர நடவடிக்கையை அடுத்து, யுவதியை கடத்திய குற்றச்சாட்டில் மூவர்கைதுசெய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)



# புத்தளம் கஜுவத்த முஸ்லிம் பாடசாலையில் நடந்த 'முஹர்ரம்' இஸ்லாமியப் புதுவருடக் கொண்டாட்டம்

(எம் சியாஜ்,)

புத்தளம் கஜுவத்தை முஸ்லிம் அரசினர் வித்தியாலயத்தில் முஸ்லிம்களின் புத்தாண்டு முஹர்ரம்சிறப்புகொண்டாட்டநிகழ்வுவியாழக்கிழமை பாடசாலையின் அதிபர் அஷ்ஷைக் இஸட்.ஏ சன்ஹீர் தலைமையில் மாணவர்களின் களிகம்பு வரவேற்புடன் ஆரம்பமானது.

பிரதி அதிபர் அஷ்ஷைக் எம்.எஸ்.எம்ஸ பாஸில் மற்றும் பாடசாலையின் ஆசிரிய குழாமால் மிக அழகாக வடிவமைக்கப்பட்டிருந்த குறித்த நிகழ்வில் பள்ளிவாசல் பரிபாலன சபைத் தலைவர், பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# கல்முனை அல்– அஸ்கர் வித்தியாலயத்தின் 3 மாடி கட்டட நிர்மாணப்பணி தொடக்கம்

(சர்ஜுன் லாபீர், நூருல் ஹுதா உமர்)

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸின் முயற்சியின் பயனாக பாடசாலை மாணவர்களின் நலன் கருதி கல்வி அமைச்சின் 4.9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கல்முனை கல்வி வலய கல்முனை கமுஃகமுஃஅல்– அஸ்கர் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்திற்கான தொடக்க நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கல்முனை கமுஃகமுஃஅஸ்கர் வித்தியாலய அதிபர் ஏ.எச். அலி அக்பர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்திற்கான கட்டட அனுமதி கடிதத்தை பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளித்ததுடன் கட்டடப் பணிகளை தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினின் மக்கள் தொடர்பாடல் செயலாளர், இணைப்பாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

154 வருட வரலாற்றையும், அதிக மாணவர்கள் தொகையையும் கொண்ட இந்த பாடசாலைக்குத் தேவையாக இருந்த இந்தக் கட்டடத்தை குறுகிய காலத்தில் கட்டிமுடிக்கத் தேவயான பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன குறிப்பிடத்தக்கது.

(05)

# தமிழ் அரசியல் கைதிகளுடன் கஜேந்திரன் எம்.பி. சந்திப்பு



வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைகளுக்கு வியாழக்கிழமை விஜயம் செய்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை நேரில் பர்வையிட்டு கலந்துரையாடியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது -

வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைச்சாலையில் உள்ள 9 தமிழ் அரசியல் கைதிகளை நேரில் சந்தித்தேன். வெலிக்கடையில் தங்கவேலு நிமலன் (வயது 47), ஜோ.கொ.வலன்ரினோ (வயது 41), மகசீன் சிறையில் ஆனந்தவர்ணன் (அரவிந்தன்) கடந்த மார்ச் 26இல் கைது) மகசீன் சிறையில் 15 - 29 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆனந்தசுதாகரன் ஆகியோரைப் பார்வையிட்டேன்.

அவர்களுடைய விடுதலை சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கைகளும் அக்கறையுடன் முன்னெடுக்கப்படவில்லை என்ற கவலை அவர்களுக்கு அதிகமாக உள்ளது.

எம்மைப்பொறுத்தவரையில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். அதன்கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். ஆனந்த வர்ணன் வழக்கை முன்னெடுக்கமுடியாத நிலைமையில் உள்ளார். அவர் வேண்டுமென்றே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் உள்ளிட்டவர்களின் விடுதலைக்காக அனைவரும் குரல்கொடுக்க வேண்டும். - என்றார்.(05)

# நொச்சிமுனை அருள்மிகு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகள்

மட்டக்களப்பு கல்லடி - உப்போடை, நொச்சிமுனை அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று(வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

கடந்த 3 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்தத் திருவிழா நிகழ்வுகள் கடந்த 10 தினங்களாக இடம்பெற்று, 10 ஆம் நாளான நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை தீ மிதிப்பு இடம்பெற்றதையடுத்து தீர்த்தோற்சவத்துடன் ஆலய உற்சவம் நிறைவுபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சின்னையா கிருபாகரன் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த மகோற்சவ திருவிழாவுக்கு பல பிரதேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்த அடியவர்கள் வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# மலேசிய பாதுகாப்பு அமைச்சரை சந்தித்தார் கிழக்கு ஆளுநர் செந்தில்



மலேசியாவின் பாதுகாப்பு அமைச்சர் முகமட் ஹசனை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது மலேசியாவிற்கு இலங்கைக்குமான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ சரவணன் முருகன் மற்றும் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஆகியோர் கலந்துகொண்டனர். (05)



# இலங்கையில் நூறு வயதை கடந்தோர் 495 பேர் உண்டு

## சொல்கிறார் ரஞ்சித்

இலங்கையில் நூறு வயதைக் கடந்தவர்கள் 495 பேர் இருக்கின்றனர்; என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

முதியோர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உதவித்தொகையைப் பெற இந்த நபர்களுக்கும் உரிமை உண்டு எனக் குறிப்பிட்டார். 60 வயதுக்கு மேற்பட்டோர் 27 லட்சம் பேர் உள்ளனர். இந்நிலையில், ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை 2030ஆம் ஆண்டுக்குள் 10 லட்சத்தை தாண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# புத்தளம் – அநுராதபுரம் வீதியில் விபத்தில் குடைசாய்ந்தது கார்



புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதியில் சொகுசு காரொன்றுடன் கெப் வண்டி மோதி விபத்துக்குள்ளாகிய நிலையில் காரில் பயணித்தவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்த்தப்பியுள்ளனர்.

இந்த விபத்து வியாழக்கிழமை



மாலை புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதியின் நீர் வழங்கள் அதிகாரசபை அலுவலகத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

அநுராதாபுர பகுதியிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற சொகுசு காருடன் புத்தளத்திலிருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற கெப் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து காருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, கார் குடைசாய்ந்து முற்றாக சேதமாகியுள்ளதுடன், காரில் பயணித்தவர்கள் அதிஷ்டவசமாக உயிர்த்தப்பியுள்ளனர்.

கெப்பின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.(05)

# இந்தியாவின் உதவிகளுக்கு மக்கள் காங்கிரஸ் பாராட்டு

## இந்திய தூதுவர் – ரிஷாத் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் ஆராய்வு



இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் பரஸ்பர ஒத்துழைப்புக்கான வாய்ப்புக்களை ஆராய்வது தொடர்பில், மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கு இடையில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது, கடினமான காலங்களில் இந்தியா இலங்கைக்கு செய்த உதவிகளுக்காக மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் தமது நன்றிகளை வெளிப்படுத்தினார்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அமைத்துக்கொடுத்த 50 ஆயிரம் வீடுகள் மற்றும் மலையகத்துக்கு வழங்கிய 10 ஆயிரம் வீடுகள் தொடர்பிலும் இங்கு பிரஸ்தாபித்த தலைவர் ரிஷாத், இதுவரை எந்தவொரு நாடும் இவ்வாறான உதவிகளை செய்திருக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், அயல்நாடான இந்தியா தொடர்ந்தும் இலங்கைக்கு உதவ வேண்டியதன் அவசியம் குறித்தும் தெளிவுபடுத்திய அவர், நெருக்கடியான காலங்களின் போது இலங்கைக்கு வழங்கிய மனிதாபிமான உதவிகள் போன்று, இனியும் உதவ வேண்டியதன் கடப்பாட்டையும் எடுத்துரைத்தார்.

அதேபோன்று, வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக இரண்டு நாடுகளின் மீனவர்களுக்கு இடையில் ஏற்பட்டு வரும் சர்ச்சைகள் குறித்து சுட்டிக்காட்டிய அவர், இலங்கைகடல்வளத்தைஇந்தியமீனவர்களின் ட்ரோலர் படகுகள் வகைதொகையின்றி அள்ளிச் செல்வதன் பாதிப்புகள் குறித்தும் தமது கவலையை வெளியிட்டார். எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவர எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பிலும், இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், வட மாகாணத்தில் யுத்தகாலத்தில் சேதமாக்கப்பட்ட சுமார் 200 பாடசாலைகளை, யுத்தம் முடிந்த கையோடு, எமது வேண்டுகோளை ஏற்று, துரிதகதியில் புனரமைப்பதற்காக உதவி செய்தமையை இத்தருணத்தில் நன்றியுடன் நினைவுகூர்கிறோம் என்றும் தலைவர் ரிஷாத் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை, இங்கு கருத்து வெளியிட்ட இந்திய உயர்ஸ்தானிகர், தற்போது இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் இன்னோரன்ன பல உட்கட்டமைப்பு வசதிகளுக்காகவும் பல கோடி ரூபாக்களை இந்தியா செலவிட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், கட்சியின் தவிசாளர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, செயலாளர் எஸ்.சுபைர்தீன் மற்றும் பிரதித் தலைவர் என்.எம்.சஹீட் ஆகியோரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிண்ணியா பூவரசந்தீவு அல் மினா மஹா வித்தியில் புது வருட நிகழ்வு





( எச்.எம். ஹலால் தீன் )

கிண்ணியா பூவரசன் தீவு அல்மினா மகா வித்தியாலயத்தில் இஸ்லாமிய புது வருட நிகழ்வு பாடசாலை கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம் வை. ஹதியத்துல்லாஹ் தலைமையின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்வி அலுவலக அதிகாரிகள், மௌலவிமார்கள், ஆசிரியர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



இஸ்லாமிய புது வருடத்தின் வரலாறு அம்மாதத்தில் சிறப்பு, கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்பன இதன் போது எடுத்துரைக்கப்பட்டன.

அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வெற்றி சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (05)

# ஆடிவேல் விழா பாற்குட பவனி



(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு மாவடி ஸ்ரீகந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா மகோற்சவத்தின் ஓரங்கமாகிய பாற்குட பவனி நேற்று (வெள்;ளிக்கிழமை) கண்ணகைஅம்மன்ஆலயத்திலிருந்து நடைபெற்றது.

(05)









காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.07.2024இல் வெளியிடப்பெற்றது